**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**திருப்பூர்.**
**முன்னிலை : திரு.K.R.கண்ணன்,பி.ஏ.,பி.எல்.,**
**(J.O.CODE : TN01220)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**
**2024–ம் ஆண்டு ஜுலை மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், ஆனித் திங்கள் 18 ம் நாள்**

**E.A.No.85/2024**

**In**

**E.P.No.19/2018**

1. செல்வாம்பாள் (இறப்பு)

2. பத்மாவதி (இறப்பு)

3. அமுதா.

4. மைனர் மஞ்சு (இறப்பு)

5. சுப்ரமணியம் (இறப்பு) .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சென்னியப்பன் (இறப்பு).

2. சண்முகம்.

3. கிருஷ்ணமூர்த்தி (இறப்பு).

4. உதவி ஆணையர்,
   விற்பனை வரி அலுவலகம்,
   பொள்ளாச்சி.

5. சி.ஜெயபால்.

6. இந்திராணி.

7. கமலா.

8. கவிதா. .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 25.06.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.அருணாசலம், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கணேஷ்குமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு பரிசீலித்தும் இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்த இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

<u>உத்தரவு</u>

**நிறைவேற்று** மனுவின் மனுதாரர்கள் இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் XXVI விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்து நிறைவேற்று மனு சொத்தை அடையாளம் கண்டு சுவாதீனம் பெற வேண்டி நீதிமன்ற ஆணையாளர் மற்றும் சர்வேயர் நியமனம் செய்ய வேண்டி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**1) <u>மனுவின் சுருக்கம்</u>:–**

i) இம்மனுவில் மனுதாரர் எதிர்மனுதாரர் பேரில் 21.06.2017ல் இறுதிநிலை தீர்ப்பு பெற்று சுவாதீனம் பெற மனு தாக்கல் செய்யப்பட்டது. தற்போது நீதிமன்றத்தின் உத்தரவுபடி சுவாதீனம் பெற அமீனா சென்றபோது எதிர்மனுதாரர்கள் வேண்டும் என்று கட்டிடத்தை பூட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அதனால் சர்வேயர் உதவியுடன் மனுச் சொத்தினை அளந்து அத்துக்காட்ட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது.

ii) எனவே எதிர்மனுதாரர்கள் வேண்டும் என்று கட்டிடத்தை பூட்டிவிட்டு சென்றுவிட்டதால் நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் உதவியுடன் மனுச் சொத்தினை அளந்து அத்துக்காட்ட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **8ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர்களின் மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும்.

ii) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிராமண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது.

iii) 8 வது எதிர்மனுதாரரின் தகப்பனார் 25.07.2022ம் தேதி திடீரென இறந்துபோன பிறகு, மனு சொத்தை குறித்து தீர்ப்பு ஏற்பட்டது 8ம் எதிர்மனுதாரருக்கு தெரிய வந்தது. 29.04.2024ம் தேதி 8ம் எதிர்மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் கட்டளை XXI விதி 26 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி சுவாதீன உத்தரவுகளை நிறுத்தி வைக்கும்படி மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை இந்த நீதிமன்றம் கோப்புக்கு எடுக்காமலே திருப்பப்பட்டது. அதனை எதிர்த்து 8ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை

உயர் நீதிமன்றத்தில் C.R.P.(SR.No.70018/2024) தாக்கல் செய்துள்ளார். 8ம் எதிர்மனுதாரர் இந்த மனுவுக்கு அவசியம்மற்ற தரப்பினர் என்பதால் மனு நிலைக்கதக்கதல்ல. மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

3) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வாதுரைகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. 8வது எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை 21.06.2024ம் தேதி சமர்பிக்கும்படி உத்தரவிட்டும் வாதுரைகளை சமர்ப்பிக்கவில்லை.

4) கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் நிறைவேற்று மனுவில் முழு விசாரணைக்கு பிறகு, தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு ஆதரவாக சுவாதீன பரிகாரம் வழங்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் நிறைவேற்று மனு சொத்தின் சுவாதீனம் பெற சென்றபோது எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்து, நிறைவேற்று மனு சொத்தில் உள்ள வீட்டை பூட்டி விட்டதால் சுவாதீனம் பெற வேண்டி போலீஸ் பாதுகாப்பு மற்றும் பூட்டை உடைக்க உத்தரவு பெற்ற பிறகு, மீண்டும் மனு சொத்தை சுவாதீனம் பெறுவதற்காக சென்ற போது நிறைவேற்று மனு சொத்தை அத்து காட்டி அடையாளம் காட்ட முடியாததால் மனுதாரர்கள் சுவாதீனம் பெற முடியவில்லை. ஆகையால், இந்த மனுவின் மூலம் நீதிமன்ற ஆணையாளரை

நியமனம் செய்து நிறைவேற்று மனு சொத்தை அளந்து அடையாளம் காட்ட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாக வாதுரைத்து, மனு அனுமதித்து மீண்டும் சுவாதீன உத்தரவு இட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

6) <u>**தீர்வு**</u> **:–**

i) மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதம் மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது.

ii) மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்த நிறைவேற்று மனு முழு விசாரணைக்கு பின்பு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு நிறைவேற்று மனு சொத்தின் சுவாதீனம் வழங்க வேண்டி 21.03.2024 ம் தேதி உத்தரவு ஏற்பட்டுள்ளது. அந்த உத்தரவை எதிர்த்து இன்று வரை எதிர்மனுதாரர்கள் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து, தடை உத்தரவு பெற்று இந்த நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவில்லை. இரண்டு முறை மனு சொத்தை சுவாதீனம் பெறுவதற்காக மனுதாரர்கள் சென்றபோது எதிர்மனுதாரர்களால் தடை ஏற்படுத்தப்பட்டு நீதிமன்ற அமீனாவால் நிறைவேற்று மனு சொத்தை மனுதாரர்களிடம் சுவாதீனம் வழங்க முடியவில்லை. 13.06.2024 ம் தேதி மனுதாரர்கள் நீதிமன்ற அமீனா மூலம் நிறைவேற்று மனு சொத்தை சுவாதீனம் பெற கிராம நிர்வாக அலுவலரிடம் சென்றபோது மனு சொத்தில் தார்சு

கட்டிடங்கள் உள்ளதால் கிராம நிர்வாக அலுவலர் மனு சொத்தை பார்வையிட்டு, அளவீடு செய்ய நில அளவையர் துணை வேண்டும் என்று தெரிவித்ததால் மனுதாரர்கள் நிறைவேற்று மனு சொத்தை சுவாதீனம் பெற முடியவில்லை.

iii) மனு கோப்பையை பரிசீலனை செய்து பார்க்கும்போது, அசல் வழக்கு எண்.383/2004 இறுதி நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் நிறைவேற்று மனு சொத்தின் சுவாதீனத்தை பெற வேண்டி மனுதாரர்கள் 2018 ம் ஆண்டு நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். ஏற்கனவே முழு விசாரணைக்கு பின்புதான் நிறைவேற்று மனு அனுமதிக்கப்பட்டு, சுவாதீன உத்தரவு ஏற்பட்டுள்ளது. தற்போது நீதிமன்ற ஆணையாளர் மற்றும் நில அளவையர் உதவியுடன் மனு சொத்தை கண்டறிந்தால்தான் மனுதாரர்கள் மனு சொத்தை சுவாதீனம் பெற முடியும் என்று சுவாதீன கட்டளை திருப்பப்பட்டதாலும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடோ, தடை உத்தரவோ நிலுவையில் இல்லாத காரணத்தினால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிப்பதே சட்டத்தின்பால் சிறந்தது என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

iv) நிறைவேற்று மனுவில் 21.03.2024 ம் தேதி ஏற்பட்டுள்ள சுவாதீன உத்தரவின் அடிப்டையில் நிறைவேற்று மனு சொத்தை அளந்து மனுதாரர்கள், நிறைவேற்று மனு சொத்தின் சுவாதீனம் பெற வேண்டி வழக்கறிஞர் M.கோகிலா, B.Com., LL.B., (Hon's) (இளம் வழக்கறிஞர்

திரு.முத்து சண்முகசுந்தரம்) அவர்கள் நீதிமன்ற ஆணையாளராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையாளரின் ஊதியமாக ரூ.7,500/- நிர்ணயம் செய்யப்பட்டு, மனுதாரர்கள் நேரடியாக நீதிமன்ற ஆணையாளரின் ஊதியத்தை ஒரு வாரத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையாளர் அசல் வழக்கு எண்.383/2004 ல் இடைக்கால மனு எண்.105/2007 இறுதி நிலை தீர்ப்பாணையின்படி நிறைவேற்று மனு சொத்தை அளந்து காட்டி நீதிமன்ற அமீனாவிற்கு மனு சொத்தை மனுதாரர்களுக்கு சுவாதீனம் வழங்க உதவ வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7) முடிவாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024-ம் ஆண்டு ஜுலை மாதம் 02 ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.07.02 18:27:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.07.02 18:27:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.